Star Health and Allied Insurance Co. Ltd.

Date: July 31, 2022
Place: Chennai

**Ref: SHAI/B & S/SE/75/2022-23**

To,
The Manager
Listing Department
BSE Limited
Phiroze Jeejeebhoy Tower
Dalal Street
Mumbai – 400001
**Scrip Code: 543412**

To
The Manager
Listing Department
National Stock Exchange of India Limited
Exchange Plaza, 5th Floor, Plot C/1,
G Block, Bandra-Kurla Complex
Mumbai – 400051.
**Scrip Code: STARHEALTH**

Dear Sir(s),

**Newspaper Advertisement –Financial Results June 30, 2022.**

Further to our letter dated SHAI/B & S/SE/72/2022-23 dated July 29, 2022 in compliance with Regulation 47 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we enclose herewith a copy of the extract of Unaudited Financial Results for the quarter ended June 30, 2022 published in Financial Express (English Edition) and Dinamani (Tamil Edition).

The above information is also being hosted on the Company's website at www.starhealth.in

This is for your information and records.

Thanking you,

**For Star Health and Allied Insurance Company Limited**

**Jayashree Sethuraman,**
**Company Secretary & Compliance Officer**

# சாஸ்த்ரா பல்கலை.யில் சட்டப் படிப்பு தரவரிசைப் பட்டியல் வெளியீடு

**தஞ்சாவூர், ஜூலை 30:** தஞ்சாவூர் சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்புக்கான தரவரிசைப் பட்டியல் சனிக்கிழமை இரவு வெளியிடப்பட்டது.

இதுகுறித்து பல்கலைக்கழக நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இப்பல்கலைக்கழகத்தில் சட்டவியல் படிப்பில் 2022 – 23 ஆம் ஆண்டில் சேருவதற்கான விண்ணப்பங்கள் பெற சனிக்கிழமை (ஜூலை 30) மாலை 5 மணி வரை அவகாசம் வழங்கப்பட்டது.

இதில் தமிழ்நாடு மட்டுமல்லாது பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மாணவர்கள் விண்ணப்பம் செய்தனர். இதைத் தொடர்ந்து, முதல் சுற்று கலந்தாய்வுக்கான தர வரிசைப் பட்டியல் சனிக்கிழமை இரவு 9 மணிக்கே வெளியிடப்பட்டது.

சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம் தனியாக நுழைவுத் தேர்வை நடத்தாமல், கிளாட் (சட்டப்படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வு) மதிப்பெண்களையும், பிளஸ் 2 மதிப்பெண்களையும் சேர்த்து இந்தத் தரவரிசைப் பட்டியலைத் தயாரித்து வெளியிட்டுள்ளது.

இப் பட்டியலில் சென்னை அடையாறு ஸ்ரீசங்கரா சீனியர் பள்ளி மாணவர் வி. நவீன் பாலாஜி பிளஸ் 2 வகுப்பில் 96.20 சதமும், கிளாட் தேர்வில் 83.25 சதமும் பெற்று முதலிடம் பெற்றார். இவருக்கு அடுத்து கேரள மாநிலம், திருச்சூர் ஹரிஸ்ரீ வித்யா நிதி பள்ளி மாணவி எச்.ஆர். ரித்திகா பிளஸ் 2 தேர்வில் 97.80 சதமும், கிளாட் தேர்வில் 75.25 சதமும் பெற்று இரண்டாமிடத்திலும், கோவை வித்யா நிகேதன் பள்ளி மாணவி பி. ஸ்ரேயா பிளஸ் 2 தேர்வில் 95.80 சதமும், கிளாட் தேர்வில் 71.50 சதமும் பெற்று மூன்றாமிடத்திலும் உள்ளனர்.

தகுதியின் அடிப்படையில் வெளிப்படைத் தன்மையுடன் சேர்க்கைக்கான கலந்தாய்வு இணையவழியில் ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 31) முதல் ஆகஸ்ட் 29 வரை நடைபெறவுள்ளது.

# மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கிறார் பிரதமர்

## மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேச்சு

**சென்னை, ஜூலை 30:** மக்களின் எண்ணங்களை பிரதமர் நரேந்திர மோடி பிரதிபலிப்பதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசினார்.

சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற பிரதமர் மோடி தொடர்பான புத்தகம் குறித்த கலந்துரையாடலில் அவர் பேசியதாவது:

பிரதமர் மோடி ஆட்சியில் இந்தியாவில் ஜனநாயகம் வலுவாக உள்ளது. அடிப்படையில் மாற்றம் கொண்டுவர வரவே ஆட்சிக்கு வந்துள்ளதாக பிரதமர் மோடி கூறுவார்.

ஒவ்வொரு மாநிலத்திலும், அதுவும் முன்னேறிய மாநிலமாக இருந்தாலும், அதில் சில மாவட்டங்கள் பின்தங்கி இருக்கின்றன. அவற்றையும் முன்னேற்ற வேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டு 116 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றையும் அரவணைத்து வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும் திட்டத்தைத் தொடங்கியது மோடிதான். இதில் பாரபட்சம் பார்க்கவில்லை.

மோடிக்குஏன் வெற்றிகள் கிடைக்கின்றன என்றால் ஒவ்வொரு நிலையையும் யோசித்து, மக்களுக்கான பங்களிப்புடன் திட்டங்களைச் செயல்படுத்துகிறார். ஒவ்வொரு திட்டத்திலும் மக்களின் கருத்துகள் இருக்க வேண்டும் என பிரதமர் நினைக்கிறார். இந்தத் திட்டம் நமது திட்டம் என மக்கள் உரிமை கொள்ள வேண்டும். அப்போதுதான் முன்னேற முடியும் என்பதே அவரது எண்ணமாக உள்ளது.

ஒவ்வொரு தேர்தலின்போதும் வாக்காளர்கள் யோசித்துப் பார்த்தே வாக்களிக்கின்றனர். அரசின் திட்டங்களை ஊடகங்களும், சமூக ஊடகங்களும் எடுத்துச் சொல்கின்றன. இப்போது, குடிமக்களும் பத்திரிகையாளர்களாக மாறத் தொடங்கியுள்ளனர். அவர்களும் தங்களது கருத்துகளைப் பதிவு செய்கிறார்கள். அந்த வகையில், ஜனநாயகம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், கடந்த 2002, 2007, 2012 ஆகிய ஆண்டுகளில் குஜராத் சட்டப்பேரவைத் தேர்தல்களில் தொடர் வெற்றி கிடைத்தது. 2014-இல் நாடு முழுவதும் வெற்றி பெற்று பாஜக தனிப்பெரும் கட்சியானது. நரேந்திர மோடி பிரதமரானார்.

2019-இல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் பாஜக வெற்றி பெற்றது. இது சாதாரண விஷயமல்ல. மக்களுடன் நேரடியாக தொடர்பு வைத்திருக்கக் கூடிய தலைவராக நரேந்திர மோடி விளங்குகிறார். இதனால், தேர்தல் வெற்றிகள் சாத்தியமாகின்றன என்றார் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

இந்த நிகழ்ச்சியில், பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை, ஓய்வு பெற்ற நீதிபதி வள்ளிநாயகம், பாஜக மூத்த தலைவர் எச். ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற பிரதமர் மோடி குறித்த புத்தகத்தின் மீதான கருத்துரைகள் வழங்கும் நிகழ்வில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். உடன், பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை, ஓய்வு பெற்ற நீதிபதி டி.என்.வள்ளிநாயகம்.

# பாஜகவுடன் கூட்டணியா? கனிமொழி பதில்

**சென்னை, ஜூலை 30:** பாஜகவுடன் கூட்டணியா என்ற கேள்விக்கு மக்களவை திமுக குழு துணைத் தலைவர் கனிமொழி பதிலளித்தார்.

சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பிறகு, செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி:

உலக நாடுகளின் கவனத்தை தமிழகம் நோக்கி திருப்பும் வகையில் செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை சிறப்பாக முன்னெடுத்திருக்கிறது மாநில அரசு. தமிழகத்தில் அரசு நிகழ்ச்சியில் பிரதமர் கலந்து கொண்டார். அதை வைத்து திமுகவின் நிலைப்பாட்டை சந்தேகிக்கக் கூடாது. பாஜகவுடன் கூட்டணி என முடிச்சுப் போடுவதும் அர்த்தமில்லாதது.

எம்.பி.க்கள் இடை நீக்கம் செய்யப்பட்டது தவறான நடவடிக்கை. இதனால் நாடாளுமன்றத்தில் போராட்டம் நடைபெற்று வருகிறது. எங்கள் கோரிக்கை விவாதிக்கப்படும் வரை போராட்டம் தொடரும் என்றார் கனிமொழி.

# ஓய்வு பெறும் நாளில் பத்திரப் பதிவாளர் பணியிடை நீக்கம்

**செய்யாறு, ஜூலை 30:** பணி ஓய்வு பெறும் நாளான சனிக்கிழமை (ஜூலை 30), செய்யாற்றில் மாவட்ட பத்திரப் பதிவாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு மாவட்டப் பத்திரப் பதிவு அலுவலகத்தின் கீழ், செய்யாறு, ஆரணி, வெம்பாக்கம், தெள்ளார் உள்ளிட்ட11 சார்-பதிவாளர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

செய்யாற்றில் மாவட்டப் பதிவாளராக சம்பத் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பணியாற்றி வந்தார். இவரது பணிக்காலம் ஜூலை 30-ஆம் தேதியுடன் நிறைவடைந்தது. இந்த நிலையில், மாவட்டப் பதிவாளராகப் பணியாற்றி வந்த சம்பத் வெள்ளிக்கிழமை திடீரென பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

இவர், மாவட்டப் பதிவாளராகப் பணியாற்றிய காலத்தில் நிலத்துக்கான வழிகாட்டி மதிப்பீட்டை விட, குறைவான மதிப்பீட்டைக் கொண்டு பத்திரப் பதிவு செய்து, அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தியதாக பல புகார்கள் உள்ளன. மேலும், இவரது அலுவலகத்தில் ஊழல் தடுப்பு, கண்காணிப்புப் பிரிவு போலீஸார் திடீர் சோதனையும் மேற்கொண்டனர். இது தொடர்பாக பத்திரப் பதிவு அலுவலகத்துக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சம்பத்தை பணியிடை நீக்கம் செய்து சென்னையில் உள்ள பத்திரப் பதிவு ஐஜி உத்தரவிட்டார்.

# வேறு மாநிலத்துக்குச் சென்ற ரூ.2 லட்சம் கோடி முதலீடு: எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

**சென்னை, ஜூலை 30:** தமிழகத்துக்கு வர வேண்டிய ரூ.2 லட்சம் கோடி முதலீடு, வேறு மாநிலத்துக்குச் சென்றுவிட்டதாகக் கூறி, திமுக அரசுக்கு அதிமுக இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை: வேதாந்தா, பாக்ஸ்கான் நிறுவனங்கள் இணைந்து, தமிழகத்தில் ரூ.2 லட்சத்து 6 ஆயிரம் கோடி முதலீடு செய்ய இருந்தது. வாகனங்களுக்குத் தேவையான செமிகண்டக்டர் எனும் இயந்திர சாதன உற்பத்தி ஆலையைத் தொடங்க அவ்விரு நிறுவனங்களும் முடிவு செய்து, இதற்காக தமிழக அரசுடன் மட்டுமல்லாமல், மேலும் சில மாநில அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தின. ஆனால், திமுக ஆட்சியாளர்கள் விதித்த நிபந்தனைகளால் அந்தத் தொழிற்சாலை மும்பைக்குச் சென்றுவிட்டதாக செய்திகள் வந்துள்ளன. இதன் காரணமாக, மகாராஷ்டிர மாநிலத்தில் 2 லட்சம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளது. மேலும், மொத்த ஜிஎஸ்டி வருவாயாக சுமார் ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் கோடி கிடைக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய இந்த முதலீடு, வேலை வாய்ப்பு மற்றும் வருவாய் ஆகியவை இந்த ஆட்சியாளர்களின் அகோர பசியால் கைநழுவி போனதன் விளைவாக, தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை திமுக அரசு கேள்விக்குறியாக்கி உள்ளது.


**பொது அறிவிப்பு**

சர்வே எண். 128/2B2 மதனந்தபுரம் கிராமம் மனை எண். 2. மாதா நகர் விரிவு - IV விஸ்தீரணம் 3474 சதுர அடி நிலம் சொத்தானது 23.05.1996 தேதியிட்ட விற்பனை பத்திரம் S. சுப்பராயடுவாகிய எனக்கும் ராணி என்பவருக்கும் இடையே பவர் ஏஜெண்ட் திரு. A. ராஜா என்பவர் மூலம் பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திரம் மூலம் இந்த சொத்து என் வசம் உள்ளது. இந்த சொத்தின் பிரத்தியேக உரிமையாளரான என்னைத் தவிர வேறு யாருக்கும் இந்த சொத்தின் மீது எந்தவித உரிமையும் இல்லை. மீறி வேறு எவரேனும் இந்த சொத்தின் மீது ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டால் அது சட்டவிரோதமான செயலாகும். அத்தகைய செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த பொது அறிவிப்பின் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

- S. சுப்பராயடு
31.07.2022

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**

ஆவடி கிளைக்கு
(2200 to 2500 sq.ft)
அலுவலக இடம் தேவை

எங்களது வங்கிக் கிளை அமைப்பதற்கு மேல் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு **சுமார் 2200 ச. அடி முதல் 2500 ச. அடி வரை** (+or - 10%) **பரப்பளவு கொண்ட இடம் (கட்டப்பட்டுள்ள உடனடியாக உபயோகிக்கும் வகையில் எங்கள் தேவைக்கேற்ப கட்டிடம்) தரைதளத்தில் பார்க்கிங் வசதியுடன் மெயின் ரோட்டில் வாடகைக்கு தேவைப்படுகிறது.** விருப்பமுள்ளவர்கள் விண்ணப்ப படிவங்களை கீழ்க்கண்ட முகவரியில் உள்ள எங்களது மண்டல அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது எங்களது வங்கியின் **website: www.iob.in** மூலம் log செய்து எடுத்துக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு **22.08.2022 மாலை 4.00 மணிக்குள்** கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.)

முதன்மை மண்டல மேலாளர்
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
மண்டல அலுவலகம், சென்னை-II
763, அண்ணா சாலை, சென்னை - 600002,
தொலைபேசி : **044-28529042**

**PUBLIC NOTICE**

Take notice that our client proposes to purchase land of an extent of 2 grounds and 743 sq.ft. or 5543 sq.ft. as per title deed, 5264 sq.ft. as per patta, comprised in old R. S. Nos. 353/43 and 353/46 (part), new R. S. No. 353/64 in Block No. 20 of Egmore Village, Egmore Taluk, Chennai District, together with the building thereon, situated at old No. 5, new No. 9, Harrington Road 3rd Avenue, Chetpet, Chennai 600 031 (Said Property) from Dr. Anisya Thomas. The original of the General Power of Attorney executed by (i) Sarojini Rajarathnam and (ii) Premilla Rajarathnam empowering Srichand K. Bajaj to deal with the Said Property is missing/non-traceable. Any person(s) having any knowledge of the whereabouts of the abovementioned non-traceable/unavailable document, may intimate the undersigned.

Any person having any claim or demand on the Said Property are hereby called upon to state in writing their claim addressed to the undersigned with documentary proof to substantiate their claim, within 7 days from this date, failing which our client will deal with the Said Property, free of any encumbrance or any adverse claim whatsoever.

**NIRMAL CARIAPPA & K. JACOB GEORGE**
ADVOCATES
No.22/1, Sterling Road
First Cross Street,
Nungambakkam
Chennai 600 034

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!



IIM AHMEDABAD · IIM AMRITSAR · IIMB · IIM JAMMU · IIM KASHIPUR · IIM RANCHI · IIM SAMBALPUR · IIM SIRMAUR · IIM TRICHY · IIMU

**INDIAN INSTITUTES OF MANAGEMENT (IIMs)**

Ahmedabad, Amritsar, Bangalore, Bodh Gaya, Calcutta, Indore, Jammu, Kashipur, Kozhikode, Lucknow, Nagpur, Raipur, Ranchi, Rohtak, Sambalpur, Shillong, Sirmaur, Tiruchirappalli, Udaipur, Visakhapatnam

**Common Admission Test**
**CAT 2022**

The Indian Institutes of Management will conduct a computer-based Common Admission Test 2022 (CAT 2022) on **November 27, 2022** in **three** sessions. Detailed information on CAT 2022 may be obtained from the CAT website.

**CAT website : www.iimcat.ac.in**

CAT 2022 is a prerequisite for admission to various Post Graduate and Fellow/Doctorate programmes of IIMs. CAT 2022 scores are allowed to be used by listed non-IIM member institutions. A list of such institutions is provided on the CAT website. IIMs have no role in the selection process of non-IIM institutions.

**CAT 2022 ELIGIBILITY**

Please refer to the detailed notification on the CAT website. **Applicants should note that mere fulfillment of the minimum eligibility criteria will not ensure consideration for shortlisting by IIMs.**

**RESERVATIONS**

Refer to the CAT website for information regarding reservation of seats for various categories of applicants. **No change in the category will be entertained after CAT registration. The applicants are advised to pay attention while registering.**

**REGISTRATION FEES**

₹1150 for SC, ST and PwD category candidates.
₹2300 for all other categories of candidates.
Please note that a candidate needs to pay the registration fees only once, irrespective of the number of institutes he/she is applying for. Fees once paid cannot be refunded under any circumstances.

**IMPORTANT DATES**

| | |
|---|---|
| Registration opens | : **August 03, 2022 (10:00 am)** |
| Registration closes | : **September 14, 2022 (5:00 pm)** |
| Admit card download | : **October 27 - November 27, 2022** |
| Test date | : **November 27, 2022** |
| Result declaration | : **Second week of January, 2023 (Tentative)** |

**TEST CENTRES**

CAT will be conducted in test centres spread across around 150 test cities. Candidates will be given the option to select any six test cities in order of their preference.

**DISCLAIMER**

This advertisement is only intended to be an announcement for CAT 2022. For COVID-19 related updates, detailed information, rules and procedures regarding CAT and the admission process of various IIMs, candidates should visit the CAT website.

Any dispute concerning CAT 2022 would be subject to the jurisdiction of the competent Courts within the territorial jurisdiction of the City of Bangalore only.

**IMPORTANT**

**Candidates must declare and maintain a valid and unique email account and a mobile phone number throughout the selection process.**

LALIT



**STAR Health Insurance** Personal & Caring
The Health Insurance Specialist

**STAR HEALTH AND ALLIED INSURANCE CO LTD**
Corp. Office: "Star Insurance Towers", No.1, New Tank Street, Valluvar Kottam High Road, Nungambakkam, Chennai - 600 034.
Toll Free No. : 1 800 425 2255, Website: www.starhealth.in
CIN: L66010TN2005PLC056649, Email: info@starhealth.in

**STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED JUNE 30, 2022**

(₹ in Lakhs)

| Sr. No. | Particulars | Three Months ended | | Year ended |
|---|---|---|---|---|
| | | June 30, 2022 Unaudited | June 30, 2021 Audited | March 31, 2022 Audited |
| 1 | Total Income from Operations (Note 1) | 2,46,366 | 2,18,510 | 11,46,347 |
| 2 | Net Profit/(Loss) for the period (before Tax, Exceptional and / or Extraordinary Item) | 28,798 | (28,029) | (1,39,664) |
| 3 | Net Profit/(Loss) for the period before tax (after Exceptional and / or Extraordinary Item) | 28,798 | (28,029) | (1,39,664) |
| 4 | Net Profit/(Loss) for the period after tax (after Exceptional and / or Extraordinary Item) | 21,324 | (20,978) | (1,04,067) |
| 5 | Total Comprehensive Income for the period (Comprising Profit / (loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax) (Note 2) | NA | NA | NA |
| 6 | Paid up Equity Capital | 57,610 | 54,860 | 57,552 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) | - | - | - |
| 8 | Securities Premium Account | 5,71,071 | 3,68,520 | 5,70,306 |
| 9 | Net Worth | 4,73,486 | 3,29,949 | 4,51,338 |
| 10 | Paid Up Debt Capital | 72,000 | 25,000 | 72,000 |
| 11 | Debenture Redemption Reserves | 1,500 | 1,500 | 1,500 |
| 12 | Earnings per share (face value of ₹10/- each) | | | |
| | 1. Basic (not annualised) (in ₹) | 3.70 | (1.43) | (18.65) |
| | 2. Diluted (not annualised) (in ₹) | 3.59 | (1.43) | (18.65) |
| 13 | Debt Equity Ratio (No. of times) | 0.15 | 0.08 | 0.16 |
| 14 | Debt Service Coverage Ratio (No. of times) | 18.31 | (43.40) | (29.59) |
| 15 | Interest Service Coverage Ratio (No. of times) | 18.31 | (43.40) | (29.59) |

Notes:
1. Total Income from Operations represents Gross Written Premium (GWP).
2. The Indian Accounting Standards (Ind AS) are currently not applicable to Insurance Companies in India.
3. The above results for the quarter ended June 30, 2022 were reviewed by the Audit Committee and adopted by the Board of Directors in their meeting held on July 29, 2022 and the Joint Statutory Auditors of the Company have carried out a 'Limited Review' of the same.
4. The above is an extract of the detailed format of quarterly and year to date Financial results filed with the Stock Exchange under Regulation 33 and 52 of the SEBI (Listing Obligations and Disclosure requirements) regulations, 2015. The full format of quarterly and year to date Financial results are available on the website of Stock Exchanges (www.nseindia.com) and (www.bseindia.com) and the Company (www.starhealth.in).

**Registration No. and Date of Registration with the IRDAI : 129/16.03.2006**

For and on behalf of Board of Directors
Sd/-
V. Jagannathan
Chairman and Chief Executive Officer
DIN: 01196055

Place: Chennai - 600 034
Date: July 29, 2022

SHAI/2022-23/PRINT(UFR FOR QTR ENDED 30-06-2022)/001. Insurance is the subject matter of solicitation. For more details on risk factors, terms and conditions please read the sales brochure carefully before concluding a sale. IRDAI clarifies to public that IRDAI or its officials do not involve in activities like sale of any kind of insurance or financial products nor invest premiums. IRDAI does not announce any bonus. Public receiving such phone calls are requested to lodge a police complaint along with details of phone call, number.



**தெற்கு ரயில்வே**
**திருவனந்தபுரம் கோட்டம்**

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் கோட்ட ரயில்வே மேலாளர் (ஸ்டோர்ஸ்), தெற்கு ரயில்வே, திருவனந்தபுரம் கோட்டம் அவர்கள், கீழ்க்காணும் ஸ்டோர்ஸ் சப்ளைக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

| ஒப்பந்தப்புள்ளி எண். | ஸ்டோர்ஸ் பற்றிய விவரம் | அளவீடு | கெடுத் தேதி |
|---|---|---|---|
| 93225576 | ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு (OSOP) விற்பனையக வடிவம் கியாஸ்குகள் (Outlets/Kiosks), கொடுக்கப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் வரைபடங்களின்படி சப்ளை செய்து நிலைநாட்டல் (கட்டுமானம்). ஒவ்வொரு கியாஸ்க் உடன் 18" அளவு ஸ்டீல் ஸ்டூல் 16" மரத்தாலான மேல்பகுதியுடன் (டாப்) சப்ளை செய்யப்பட வேண்டும். கியாஸ்குகளின் அளவு – 6 அடி x 10 அடியாகவும் உட்பக்கத்தில் நிலையான 7 அடி உயரமும் ஒட்டுமொத்தமாக 9 அடியும் கொண்டதாக பரிந்துரைத்துள்ள பொருளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். கிளஸ்ட்டர் I என்னும் முதல் தொகுதியில் இடம்பெறும் நிலையங்களாவன – கன்னியாகுமரி, நாகர்கோயில் சந்திப்புகுழித்துறை, திருவனந்தபுரம் சென்ட்ரல், திருவனந்தபுரம் பேட்டா மற்றும் கொச்சுவேலி ரயில் நிலையங்கள். ரயில்வே நிர்வாகத்தால் குறிப்பிடப்படும் அமைவிடத்தில் கியாஸ்க்குகள் அமைக்கப்பட வேண்டும். பணிக்குரிய தொகை, நிலையான ஸ்டால்கள் / கியாஸ்குகள் சப்ளை கட்டுமானம் மற்றும் நிலைநாட்டல் ஆகிய இனங்களை உள்ளிட்டதாக இருத்தல் வேண்டும். | 6 எ | 16.08.2022 |
| 93225577 | ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு (OSOP) விற்பனையக வடிவம் கியாஸ்குகள் (Outlets/Kiosks), கொடுக்கப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் வரைபடங்களின்படி சப்ளை செய்து நிலைநாட்டல் (கட்டுமானம்). ஒவ்வொரு கியாஸ்க் உடன் 18" அளவு ஸ்டீல் ஸ்டூல் 16" மரத்தாலான மேல்பகுதியுடன் (டாப்) சப்ளை செய்யப்பட வேண்டும். கியாஸ்குகளின் அளவு – 6 அடி x 10 அடியாகவும் உட்பக்கத்தில் நிலையான 7 அடி உயரமும் ஒட்டுமொத்தமாக 9 அடியும் கொண்டதாக பரிந்துரைத்துள்ள பொருளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். கிளஸ்ட்டர் I என்னும் முதல் தொகுதியில் இடம்பெறும் நிலையங்களாவன – கிளஸ்ட்டர் III என்னும் மூன்றாம் தொகுதியில் இடம்பெறும் நிலையங்களாவன – சங்கனாசேரி, கோட்டயம்,ஆலப்புழை, எர்ணாகுளம் சந்திப்பு, எர்ணாகுளம் வடக்குமற்றும் ஆல்வா நிலையங்கள். ரயில்வே நிர்வாகத்தால் குறிப்பிடப்படும் அமைவிடத்தில் கியாஸ்க்குகள் அமைக்கப்பட வேண்டும். பணிக்குரிய தொகை, நிலையான ஸ்டால்கள் / கியாஸ்குகள் சப்ளை கட்டுமானம் மற்றும் நிலைநாட்டல் ஆகிய இனங்களை உள்ளிட்டதாக இருத்தல் வேண்டும். | 6 எ | 16.08.2022 |
| 93225564 | (1) 4 கோர், 16 சதுர மிமீ LTUG கேபிள், XLPE இன்சுலேட்டட், PVC ஷீத்தர்டு, ஸ்ட்ரிப் ஆர்மர்டு – மல்ட்டி ஸ்ட்ராண்ட் அலுமினியம் கண்டக்ட்டர் உடன், வோல்ட்டேஜ் கிரேடு 1100V, சேர்க்கை 1, 2, 3 உடன் கூடிய IS 7098 / PART-I 1988 (2005 ல் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது) ன் படி அல்லது சமீபத்தியதன்படி இருத்தல் வேண்டும். ISI குறியுடன் கூடியதாக இருத்தல் வேண்டும். NABL / ILAC / மத்திய அரசு அங்கீகரித்த ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட சோதனைச் சான்றிதழ், சப்ளை உடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏற்கப்படும் தயாரிப்புகள் ஆவன – AVOCAB, TORRENT, FINOLEX, HAVELLS, RR KABLE, V-GUARD, APAR, KEC (RPG), POLYCAB, CCI, KEI, SWADESHI CABLES, ARISTOLITE / ARISTO OR TYCON மட்டுமே. | 8600 மீட்டர்கள் | 23.08.2022 |
| | (2) 4 கோர், 16 மிமீ LTUG கேபிள், XLPE இன்சுலேட்டட், PVC ஷீத்தர்டு, ஸ்ட்ரிப் ஆர்மர்டு – மல்ட்டி ஸ்ட்ராண்ட் அலுமினியம் கண்டக்ட்டர் உடன், வோல்ட்டேஜ் கிரேடு 1100 V, சேர்க்கை 1,2,3 உடன் கூடிய IS 7098 /PART-I/1988 (2005 ல் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது) ன் படி அல்லது சமீபத்தியதன்படி இருத்தல் வேண்டும். ISI குறியுடன் கூடியதாக இருத்தல் வேண்டும். பினிஷ்டு கேபிள் – மீட்டர் ஒன்றுக்கு 0.630AA –க்கு குறையாமல் இருத்தல் வேண்டும். NABL / ILAC / மத்திய அரசு அங்கீகரித்த ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட சோதனைச் சான்றிதழ் சப்ளை உடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏற்கப்படும் தயாரிப்புகள் – AVOCAB, TORRENT, FINOLEX, HAVELLS, RR KABLE, V-GUARD, APAR, KEC(RPG), POLYCAB, CCI KEI. | 500 மீட்டர்கள் | |

ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் / திறக்கப்படும் தேதியும் நேரமும்: 16.08.2022 & 23.08.2022 அன்று 14.30 மணி
மேலும் விவரங்களுக்கு காண்க – வலைதளம் – www.ireps.gov.in > E-Tender > Stores > View tenders
ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும். ஒப்பந்தப்புள்ளிகள் டிஜிட்டல் கையொப்பம் உடையவையாக இருத்தல் வேண்டும்.

கோட்ட ரயில்வே மேலாளர்/ஸ்டோர்ஸ்/தெற்கு ரயில்வே
திருவனந்தபுரம்

Follow us on: twitter.com/GMSRailway